ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# அறவியல் நோக்கில் திருக்குறளும் திருமந்திரமும்

**முனைவர் க. திலகவதி**

**இயக்குநர், தமிழ்ப்பண்ணபாட்டு மையம்**

**தமிழ்ப்பல்கலைக்கழகம்,தஞ்சாவூர் - 613 080.**

**மின்னஞ்சல் thilaga1995@gmail.com**

**திருமூலர்**

சித்தர்களுள் சிறப்புடையவராக முதலில் வைத்து எண்ணத்தக்கவர் திருமூலர். மூலன் எனப் பெயர் பெற்ற அத்தவயோகி ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் பாடி அருளி, திருவாவடுதுறையிலே இறைவனடி எய்தினார் என்பர். இவர் பாடிய மூவாயிரம் பாடல்கள் கிடைத்தில. அவர் பாடிய பாடலின் தொகுப்பே திருமந்திரம் என வழங்கலாயிற்று. இது திருமந்திரமாலை| என்றும் தமிழ் மூவாயிரம்| என்றும் பெயர்பெறும்.

"தம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரரும்,

"மூன்று பத்து மூன்றையு மூன்று சொன்ன மூலனே" (301)

என்று சிவவாக்கியரும்,

"சக்கர வர்த்தி தவராச யோகியெனும்

மிக்க திருமூலனருள் மேவுநாள் எந்நாளோ"

என்று தாயுமானவரும், திருமூலரைப் போற்றியுள்ளனர். ஔவையார் திருமந்திரத்தைத் திருக்குறள், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களோடு ஒப்பிட்டுச் சிறப்பித்துள்ளார். இதனை,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்

மூவர் தமிழும் முனிமொழியும்- கோவை

திருவா சகமும் திருமூலர் சொல்லும்

ஒருவா சகம் என் றுணர்" (நல்வழி 40)

என்னும் பாடலால் அறியலாம்.

மந்திரம், எந்திரம் (சக்கரங்கள்), தந்திரம் (வழிபாட்டு முறைகள்) முதலிய அனைத்தையும் தன்னுட் கொண்ட தமிழாகமமாக, சிவாகமமாய்த் திகழ்வது திருமந்திரம். சாத்திரமாகவும், தோத்திரமாகவும் திகழ்வது. சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சைவசித்தாந்த சாத்திரங்களுக்கெல்லாம் அடிப்படையாகத் திகழ்வது திருமந்திரமாகும். திருமந்திரத்தில் திருக்குறளின் சாயல் இடம்பெற்றுள்ள விதத்தை இக்கட்டுரை ஆராய்கின்றது. சித்தர் இலக்கியங்களில் திருமந்திரத்தில் மிகுதியாகத் திருக்குறளின் சாயல் படிந்துள்ளது.

**திருக்குறள்-திருமந்திரம் நூற்பாகுபாடு**

திருக்குறள் முப்பாலாகப் பகுக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பாலும் இயல்களாய், இயல்கள் அதிகாரங்களாகப் உட்பிரிவு பெற்று விளங்குகின்றது. அறத்துப்பால் பாயிரவியல் (4), இல்லறவியல் (20), துறவறவியல் (13), ஊழியல் (1) என நான்கு இயல்களும், 38 அதிகாரங்களையும் உடையன. பொருட்பால் அரசியல் (25), அமைச்சியல் (10), அரண் (2), கூழ் (1), படை (2), நட்பு (17), குடி (13) என ஏழு இயல்களையும் 70 அதிகாரங்களையும் உடையன. காமத்துப்பால் களவியல் (7), கற்பியல் (18) என இரண்டு இயல்களையும், 25 அதிகாரங்களையும் உடையன. மொத்தம் 133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

திருமந்திரம் 9 தந்திரங்களாகக் பகுக்கப் பெற்றுள்ளது. பாயிரத்தைச் சேர்த்தால் 10 பகுதியாகும். தந்திரங்கள் அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதல் தந்திரத்தில் 24 அதிகாரங்களும், இரண்டாம் தந்திரத்தில் 25 அதிகாரங்களும், மூன்றாவது தந்திரத்தில் 21 அதிகாரங்களும் நான்காம் தந்திரத்தில் 13 அதிகாரங்களும், ஐந்தாம் தந்திரத்தில் 20 அதிகாரங்களும், ஆறாம் தந்திரத்தில் 14 அதிகாரங்களும், ஏழாவதில் 38 அதிகாரங்களும், எட்டாம் தந்திரத்தில் 45 அதிகாரங்களும், ஒன்பதாம் தந்திரத்தில் 27 அதிகாரங்களுமாக மொத்தம் 227 அதிகாரங்கள் அமைந்துள்ளன.

திருக்குறள்-திருமந்திரத்தில் அதிகாரத் தலைப்புகள் ஒப்புமை, சொல் ஒப்புமை, சொற்றொடர்கள் ஒப்புமை, கருத்தொப்புமை ஆகியன குறித்து இங்கு ஆராயப்படுகின்றன.

**அதிகாரத் தலைப்புகள் ஒப்புமை**

திருக்குறள் திருமந்திரம்

கடவுள் வாழ்த்து (1) கடவுள் வாழ்த்து (1:1)

கொல்லாமை (33) கொல்லாமை (6)

புலால் மறுத்தல் (26) புலால் மறுத்தல் (1:7)

பிறனில் விழையாமை (15) பிறன்மனை நயவாமை (1:8)

நல்குரவு (105) நல்குரவு (1:10)

அன்புடைமை (8) அன்புடைமை (1:18)

கல்வி (40) கல்வி (1:20)

கல்லாமை (41) கல்லாமை (1:22)

நடுவுநிலைமை (12) நடுவுநிலைமை (1:23)

கள்ளுண்ணாமை (93) கள்ளுண்ணாமை (1:24)

பொறையுடைமை (16) பொறையுடைமை (2:24)

பெரியாரைத் துணைக்கோடல் (45) பெரியாரைத் துணைக்கோடல் (2:25)

துறவு (35) துறவு (6:4)

தவம் (6:5) தவம் (27)

கூடாவொழுக்கம் (28) கூடாவொழுக்கம் (7:36)

புறங்கூறாமை (19) புறங்கூறாமை (8:30)

வாய்மை (30) வாய்மை (8:38)

அவாஅறுத்தல் (75) அவாவறுத்தல் (8:40)

ஊழ் (38) ஊழ் (9:13)

இவ்வாறு திருக்குறளில் அமைந்த அதிகாரத் தலைப்புகள் சிறிதும் வேறுபாடின்றி, திருமந்திரத்தில் காணப்படுகின்றன. திருக்குறளின் அதிகாரப் பெயர்களைப் பெற்றிருப்பினும் திருமந்திரம் சிவநெறியில் ஒழுகும் அருளாளர்களின் சிறப்பியல்புகளைக் கூறும் முறையில் அமைந்திருத்தலை அறியலாம். திருக்குறள் பொதுநிலையில் நின்று அறம் கூறுகின்றது. திருமந்திரம் பொது அறத்துடன் சமயநெறிகளையும் இணைத்து அறம் உரைக்கின்றது.

**அதிகாரம் விரிவாதல்**

குறளின் அறத்துப்பாலில் இடம்பெற்றுள்ள ~நிலையாமை' (34) அதிகாரம் திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை,

உயிர் நிலையாமை (2:2,3,4,5) என சொல்வகையாக விரித்துரைக்கப்படுகின்றது. பெரியாரைப் பிழையாமை (90) என்னும் குறள் அதிகாரம், திருமந்திரத்தில் சிவநிந்தை, குருநிந்தை , மயேசுர நிந்தை (2:21, 22, 23) என விரிவாக்கம் பெற்றுள்ளது. தவம், கூடா ஒழுக்கம் (27, 28) என்னும் குறள் அதிகாரங்கள் திருமந்திரத்தில் தவநிந்தை , அவவேடம், தவவேடம், ஞானவேடம், சிவவேடம் (6: 6, 8, 9, 11, 12) என விரிவடைந்துள்ளன. இறைவனைப் பற்றியும், ஞானத்தைப் பற்றியும் கூறும் நூலாதலால் திருமந்திரம் இவ்வாறு சில அதிகாரங்களை விரித்துரைக்கின்றது என்பதை அறியலாம். திருக்குறளும் அறிவு குறித்துக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை எனவும், கேண்மை பற்றி கூறும்போது நட்பாராய்தல், தீ நட்பு, பழைமை, கூடாநட்பு எனவும் பலவாறாக விரித்துரைத்தல் ஒப்புநோக்கத்தக்கது.

வான்சிறப்பு (2), கேள்வி (42), அருளுடைமை (25) ஆகிய குறள் அதிகாரம் திருமந்திரத்தில் வானச்சிறப்பு (1:14), கேள்வி கேட்டமைதல் (1:21), அருளுடைமையின் ஞானம்படுதல் (6:7) என்று சிறிது மாற்றத்துடன் கூறப்பெற்றுள்ளது. வரைவின் மகளிர் (92) என்னும் குறள் அதிகாரத்தைத் திருமந்திரம் மகளிர் இழிவு (1:9) என்று உரைத்துள்ளது. நீத்தார் பெருமை (3)யினைத்திருமந்திரம் அந்தணர் ஒழுக்கம் (1:12), அடியார் பெருமை (1:19) ஆகவும், இறைமாட்சியை (39) இராசதோடம் (1:13) ஆகவும் திருமந்திரம் கூறுகின்றது. குறளின் ஈகை (23) அதிகாரத்தைத் திருமந்திரம் தானம் யாருக்குச் செய்ய வேண்டும், யாருக்குச் செய்யக்கூடாது என்பதைப் பாத்திரம், அபாத்திரம் (2:16, 17) என இரு அதிகாரமாகப் பகுத்துக் கூறுகிறது.

திருக்குறள் அறத்தை முதன்மையாகக் கூறும் அற நூலாதலால் வீடுபேறு குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது. திருமந்திரம் வீட்டின்ப நூலாதலின் அறத்தைச் சிறுபான்மையாகக் கூறி, வீட்டின்பத்தை மிகுதியாக விரித்துரைக்கின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம், உயிர்ப்புப் பயிற்சி, யோகமுறை முதலியவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறும் திருமந்திரப் பாடல்களில் குறள் ஒப்புமை காணப்படவில்லை.

சொல் ஒப்புமை-பொருள் ஒப்புமை- நடை ஒப்புமை

“அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு (1)

என்னும் கடவுள் வாழ்த்தின் சொல்லும் பொருளும் திருமந்திரத்தில் பல்வேறு வகையில் ஆட்சி பெற்றுள்ளன. ஆதிபகவன் என்னும் சொல் திருமந்திரத்தில் ஆதி என்றும், பகவன் என்றும், ஆதிப்பகவன், ஆதிப்பிரான், வேதப் பகவனார் என்றும் சுட்டப்படுகின்றன.

"ஆதியுமாய் அரனாய் உடலுள் நின்ற" (திருமந். 15)

"படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்

....................................

படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே" (திருமந். 1857)

"ஆதிப்பிரான் அமரர்க்கும் பரஞ்சுடர்" (319)

"அறிவுடையார் நெஞ்சொடு ஆதிப்பிரானும்" (2364)

"வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்" (2447)

என்றும் வந்துள்ளதால் இதனை அறியலாம்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்" (குறள். 3)

'மலர்மிசை ஏகினான் என்பதற்கு இடையறாது நினைக்கும் அன்பர்தம் தாமரை மலர் போன்ற மனத்தின்கண்ணே சென்று தங்கும் இறைவன் என்பது பொருள். இதனைத் திருமந்திரம்,

"வள்ளல் தலைவன் மலருறை மாதவன்" (1531)

"இப்பரிசே கமலத் துறை ஈசனை" (2092)

என்று இறைவன் அன்பர் உள்ளத்தில் உறைதலைக் குறிப்பிடுகின்றது. "நிலமிசை நீடுவாழ்வார்' என்பதற்கு எல்லா உலகத்தினும் மேலான வீட்டுலகிலே அழிவின்றி வாழ்வார் என்னும் குறளின் கருத்தினைத் திருமந்திரம்,

"திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம் சிந் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே" (138)

எனவரும் பாடலால் ஒப்புநோக்கலாம்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை எப்பொழுதும் சொல்பவரிடத்து மயக்கத்தைப் பற்றிவரும் நல்வினை, தீவினை என்னும் இரண்டும் வந்தடையாது. இதனை,

"ஏறுடை யாயிறை வாஎம்பி ரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை அண்ணல் இவரென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே" (1862)

"தன்னை யறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியின் வைத்த சிவனரு ளாலே" (2611)

எனவரும் பாடல்களால் ஒப்பு நோக்கலாம்.

இறைவன் தனக்கு ஒப்பாரை இல்லாதவன் என்பதைத் 'தனக்குவமை இல்லாதான் (குறள், 7) எனத் திருக்குறள் பகரும். திருமந்திரமும்,

"சிவனொ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொ டொப்பார் இங்கு யாவரும் இல்லை" (5)
"தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்" (7)
"ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை" (36)

என்று இறைவனின் ஒப்பிலாத தன்மையை விளம்புகிறது. குறளில் வரும் அறவாழி அந்தணன் (குறள் 8) என்னும் தொடர் திருமந்திரத்தில் அப்படியே எடுத்தாளப் பெற்றுள்ளது.

"பிறவா நெறிதந்த பேரரு வாளன்
....................
அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன் (1803)

எனவரும் தொடரால் இதனை அறியலாம்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவனடி சேரா தார்" (10)

என்னும் குறள் இறைவன் திருவடியைச் சேர்ந்தோர் பிறவியாகிய பெருங்கடலை (வினைக்கடலை) கடப்பர் என உரைக்கும். இறைவன் திருவடி பிறவியை வேரறுக்கும் என்பதனைத் திருமந்திரம்,

"பிறவி யறுத்திடும் பித்தன் கண்டீரே" (1616)

"ஒத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே" (1451)

எனவரும் பாடல்கள் உரைக்கக் காணலாம்.

இறைவன் எண்குணங்களையுடைவன் என்பதைக் குறள் 'எண்குணத்தான்' (குறள் 9) எனச் சுட்டும். இதனைத் திருமந்திரம்,

'கொடையுடை யான்குணம் எண்குண மாகும்
சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே" (444)

என எண்குணம் என்னும் சொல்லாட்சி இடம்பெற்றுள்ளதை அறியலாம். வான்சிறப்பு அதிகாரத்தில் மழையின் சிறப்பை வள்ளுவர்,

“வானின் றுலகம் வழங்கி வருதலான்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று” (11)

என்று மழையை அமிழ்தமாக இயம்புவர். திருமந்திரம் இக்கருத்தை மழைநீர் உலகினைத் தளிர்விக்கும் என்னும் பொருண்மையில்,

“அமுதூறு மாமழை நீரத னாலே" (248)

எனக் குறிப்பிடக் காணலாம். மழை என்றும் வருவாய் வளம் குன்றிவிட்டால் உழவர் ஏர்கொண்டு உழ மாட்டார் என்பதைத் திருக்குறள்,

“ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்” (14)

எனக் கூறுகிறது. திருமந்திரம் கோயிலில் பூசைகள் முட்டுப்பாடுற்றால் வாரி வளம் குன்றும் எனச் சுட்டுகின்றது.

“முன்னவ னார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங் குன்றும்" (518)

என்பதால் திருக்குறள் சொற்றொடர் அப்படியே பயிலப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. மழை பெய்யாவிடில் கடவுளுக்குத் திருவிழா, பூசைகள் நடைபெறாது என்பதைச் 'சிறப்பொடு பூசனை செல்லாது' (குறள் 18) எனக் குறிப்பிடும். திருமந்திரம் சிறப்பொடு பூசனை செய்யும் அன்பர்கள் எய்தும் நலங்களைப் பற்றிப்,

“பிறப்பை யறுக்கும் பெருந்தவம் நல்கும்
மறப்பை யறுக்கும் வழிபட வைக்கும்
. . . . . . . . .
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே" (1524)

எனக் குறிப்பிடும், சிறப்பொடு பூசனையாவது சிறப்பொடு பூநீர் திருந்தமுன் ஏந்தி, மறப்பின்றி உன்னை வழிபடும் வண்ணம்" (1830) எனவும் விளக்கம் தருகின்றது.

நீத்தார் பெருமை அதிகாரம் அறம்பூண்டாராகிய துறவியரின் பெருமையை 'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்பூண்டார்' (குறள் 13) எனச் சிறப்பிக்கிறது. திருமந்திரம்,

"இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கித்
துறக்கும் தவம்" (1614)

என்று 'இருமை' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளது. அவ்வாறே “உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்' (குறள் 24) என்பதை 'ஆனைகள் ஐந்தும் அடக்கி, அறிவென்னும் ஞானத்திரியைக் கொளுவி' (திருமந். 2316) எனத் திருமந்திரம் குறிப்பிடும். திருமந்திரம், 'அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர் (224) எனச் சிறிது மாற்றம் பெற்று உரைக்கின்றது.

“சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு" (குறள், 31)

என்னும் குறள் அறம் சிறப்பையும் செல்வத்தையும் தருமாதலால் மக்களுக்கு அதைவிட ஆக்கம் தருவது பிறிதில்லை என உரைக்கும்.; சிறப்பு என்பதற்குப் பரிமேலழகர் வீடுபேறு எனப் பொருள் உரைப்பர். இதனை அடியொற்றித் திருமந்திரம்,

“திறந்தரு முத்தியும் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்" (244)

என்று கூறுகிறது. சிறப்பு என்னும் சொல்லுக்குத் திருமூலர் முத்தி (வீடுபேறு எனப் பொருள் உரைப்பதைக் காணமுடிகிறது. தம்மால் முடியும் அறச்செயல்களை ஒவ்வொருவரும் எக்காரணத்தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம் செய்ய வேண்டும் என்பதைக் குறள்,

“ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்” (33)

என அறவுரை பகரும். இவற்றின் விளக்கமாகத் திருமூலர் இறைவழிபாடு, பசுவினைக் காத்தோம்பல், வறியவர்க்கு உணவு வழங்கல், இனிய சொற்களைப் பேசுதல் ஆகிய எளிய அறச்செயல்களைப் பட்டியலிட்டு 'யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை' (மந். 252) என்ற பாடலில் சுட்டுவர். ஒருவன் இறக்கும்போது அவனைத் தொடர்ந்து துணையாக வருவது அவன் செய்த அறச்செயலேயாகும் என்பதை 'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது, பொன்றுங்கால் பொன்றாத் துணை” (குறள். 36) எனக் குறள் கூறும். இதனைத் திருமந்திரம்,

“கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே" (144)

எனப் பகரும். துணையாக இருப்பது அறம் எனக் குறள் கூறும். சமயநெறிக்கு ஏற்பத் திருமந்திரம் விரதமும் ஞானமும் என விளம்பும்.

“வாழ்நாள் வழியடைக்கும் கல்" என்னும் குறளின் (38) சொல்லைத், திருமந்திரம் "வாணாள் அடைக்கும் வழியதுவாமே" (மந், 588) எனச் சுட்டக் காணலாம். அன்புடைமையில் வள்ளுவர் என்பதோல் போர்த்த உடம்பு' (குறள். 80) என்பதைத் திருமந்திரம் (432) ~என்பிற் கொளுவி இசைந்துறு தோற்றசை எனச் சுட்டுகிறது. எழுமை, எழுபிறப்பு என்னும் குறளின் (107) சொல்லாட்சி, திருமந்திரத்தில்,

“எண்ணிக்கும் ஏழேழ் பிறவி உணர்விக்கும் " (1523)
“என் தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்" (1876)

ஏழேழ் பிறவி என்று வந்துள்ளதை ஒப்புநோக்கலாம்.

“ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்" (குறள். 126)

என்ற உவமையை அடக்கமுடைமையில் வள்ளுவர் சுட்டுவர். திருமூலர்,

'ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி" (133)

“ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்" (2153)

எனவும் கூறியுள்ளதால் திருக்குறளின் சாயலை அறியலாம். அருள் உடையார்க்கு இவ்வுலகில் ஒரு துன்பமும் உண்டாகாது என்பதை “அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை” (குறள். 245) எனக் கூறும். திருமந்திரம் ஒருபடி உயர்வாக, அருட்செல்வமுடையவர் முன் இறைவனே தோன்றுவான் என்பதை,

“அருட்கண் இலாதார்க்கு அரும்பொருள் தோன்றா
அருட்கண் உளோர்க்கெதிர் தோன்றும் அரனே" (1808)

எனச் சிறப்பிக்கும். பொருள் இல்லார்க்கு வறியவர்க்கு இவ்வுலகம் இல்லை என்பதைத் திருமந்திரம், “புடவை கிழிந்தது, போயிற்று வாழ்க்கை, கொடையில்லை கோளில்லை கொண்டாட்டமில்லை" (209) எனப் பகரும். இவ்வாறு திருமூலரின் திருமந்திரம் முழுதும் திருக்குறளின் சாயல் படிந்துள்ளதை மிகச் சிறப்பாகக் காணமுடிகின்றது. இவற்றால், சித்தர்களுள் தலைசிறந்தவர் திருமூலர் ஆவர். திருமூலரின் திருமந்திரத்தில் செவ்வியல் தமிழ் இலக்கியமானத் திருக்குறளின் அறக்கருத்துக்கள் படிந்துள்ளதை அறியமுடிகின்றது.

திருக்குறளின் அதிகாரத் தலைப்புகள் பல திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளன. திருக்குறளில் உள்ள சொல் ஒப்புமை, சொற்றொடர் ஒப்புமை, கருத்தொப்புமை திருமந்திரத்தில் ஆட்சி பெற்றுள்ளன. அறிஞர்கள், எண்ணத்தால் ஒன்றுபட்டுள்ளதை உணரமுடிகின்றது. திருக்குறள்-திருமந்திரம் தமிழரின் அற வாழ்வியல் நூல் என்பதை அறியமுடிகின்றது.

**துணை செய்த நூல்கள்**

1. திருமந்திரம், தொகுதி 1,2,3, ஜி. வரதராசன் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1985
2. திருக்குறள் பரிமேலழகர் உரை
3. சித்தர் இலக்கியம், தொகுதி. 1,2,3, மீ.ப. சோமு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
4. தொல்காப்பியம்-பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை